**செய்தி வெளியீடு எண்: 02/06/2021** **21.06.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் இன்று (21.06.2021) முதல் மீண்டும் தொடங்கியது**

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடைபிடிக்கப்பட்ட பொதுமுடக்கத்தினால் சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் கடந்த 10.05.2021 முதல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டன. தமிழக அரசு தளர்வுகள் அறிவித்ததைத் தொடர்ந்து சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் இன்று (21.06.2021) முதல் மீண்டும் தொடங்கியது.

தமிழக அரசின் அறிவுறுத்தல்களின்படி கொரோனா வைரஸை கட்டுப்படுத்த சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில்களில் 50 சதவீத இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் கொரோனா வைரஸை தடுப்பதற்காக போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது, மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் நுழைவதற்கு அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். பயணிகள் முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசத்தை சரியாக அணியவில்லை என்றாலோ உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படும்

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் தேவையற்ற பயணத்தைத் தவிர்த்து, அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே பயணிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியான முறையில் முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**